# 9-ஆம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு விடைக் குறிப்பு

## கடலூர் மாவட்டம் 2023 – 24

ம. மரிய அந்துவான்

**I. சரியான விடையை தேர்ந்தெடு**

1. ஈ) நடனமாடும் பெண்
2. ஆ) மகாவீரர்
3. அ) கூற்று சரி காரணம் தவறு
4. அ) அமெரிக்கோ வெஸ்புகி
5. ஆ) வெளிக்கரு
6. ஆ) காலமுறைக் காற்றுகள்
7. அ) சூழ்நிலை மண்டலம்
8. அ) தலைப்பு
9. அ) சோழர்
10. அ) 1920
11. இ) 30 நாட்கள்
12. ஈ) சிறுதொழில்கள்
13. ஆ) 1934
14. ஆ) 57%

Ilahi high School YouTube
www.Padasalai.Net
மரிய அந்துவான்

**II. சுருக்கமான விடையளி (ஏதேனும் 10)**

**15. சங்ககாலத்தில் விவசாயம் முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது இதற்கான காரணங்களை கூறு?**

1. சங்க காலத்தில் மக்களுக்கு தேவையான நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன.
2. ஆறு, ஏரி, குளம் சார்ந்த நீர் பாசனம் மூலம் பயிர் தொழில் நடைபெற்றது.

**16. சீனப்பெருஞ்சுவர்**

சீன அரசுகள் வடக்கே இருந்து எதிரிகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள சுவர்களை எழுப்பினர். சின் வம்ச காலத்தில் இணைக்கப்பட்டது. தற்போதைய நீளம் 6700 கிமீ ஆகும். உலக அதிசயங்களில் ஒன்று

**17. பிரெஞ்சு புரட்சியின் போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?**

1. டெய்லே (நிலவரி), 2.காபெல்லே (உப்பு வரி) 3. டைத் தசமபாகம் 4. கார்வி – இலவச உழைப்பு

**18. ஹமுராபியின் சட்டம் முக்கியமான ஆவணமாகும் விவரி?**

1. ஹமுராபி சட்ட தொகுப்பில் பல்வேறு வழக்குகள் குறித்து இதில் 282 பிரிவுகள் உள்ளது.
2, "கண்ணுக்கு கண் பல்லுக்கு பல்" என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

மரிய அந்துவான்

**19. குருட்டு ஆறு என்றால் என்ன?**

ஆற்று வளைவுகள் காலப்போக்கில் பெரிதாகி இறுதியில் ஒரு முழு வளையமாக மாறுகிறது. இம்முழு வளைவுகள் முதன்மை ஆற்றிலிருந்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு ஒரு ஏரியைப் போன்று காட்சி அளிக்கும். இதுவே குருட்டு ஆறு எனப்படுகிறது. எ.கா. பீகாரின் கன்வர் ஏரி.

**20. கடலடி நிலத்தோற்றங்கள் யாவை?**



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

1. கண்டத்திட்டு, 2. கண்டச் சரிவு, 3. கண்ட உயர்ச்சி, 4. கடலடி சமவெளி ,5. கடல் பள்ளம் 6. கடலடி மலைத்தொடர்கள்.

**21. கொள்ளை நோய் என்றால் என்ன?**

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரே நேரத்தில் தோன்றி, குறுகிய காலத்தில் அதிகமான எண்ணிக்கையில் மக்களை பாதிக்கும் நோய். எகா, பிளேக்

**22. தொலை நுண்ணுர்வு - வரையறு**

புவியில் உள்ள பொருட்களை நேரிடையாக தொடர்புகொள்ளாமல் தொலைவிலிருந்து உற்று நோக்கி தகவல்களை சேகரிப்பது ஆகும்

**23. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சி வரையறு?**

"மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி"

**24. போக்சோ சட்டம் வரையறு?**

பாலியல் துன்புறுத்தல்களிருந்து 18 வயதுவரை உள்ள குழந்தைகளை பாதுகாக்கும் சட்டமே போக்சோ ஆகும். குற்றவாளிகளுக்கு பாரபட்சமில்லாமல் தண்டனை.

**25. இந்தியாவில் உள்ள தேர்தல் முறை பற்றி விவரி?**

நேரடித் தேர்தல் : வாக்காளர்கள் நேரடியாக தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர்.
எ.கா. MLA MP

மறைமுகத் தேர்தல் : மக்களின் பிரதிநிதிகள் வாக்களித்து தேர்வு செய்கின்றனர்.
எ.கா. குடியரசுத் தலைவர் குடியரசுத் துணைத் தலைவர்

**26. சூரிய சக்தி என்றால் என்ன?**

சூரிய ஒளி மூலம் மின் சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவது ஆகும்.

**27. அந்நியச் செலவாணி என்றால் என்ன?**

செலவாணி என்பது நாடுகளுக்கு இடையிலான பணமாகும். உள்நாட்டில் "அன்னிய நாட்டுச் செலாவணி" "வெளிநாட்டுச் செலாவணி" என அழைக்கப்படுகிறது.

**28. நுண்ணீர் பாசன தொழிற்நுட்பம் என்றால் என்ன?**

நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம் என்பது சீரான கால இடைவெளியில் அளவாக நீர் பாய்ச்சப்படும் முறை. இது பாசன நீர் பற்றாக்குறைக்கு நல்ல தீர்வாகும். பணி ஆட்களின் செலவைக் கணிசமாக குறைத்து, அதிக மகசூலைத் தருகிறது.

## III விரிவான விடையளி

**29. பொருத்துக**

| | | |
|---|---|---|
| i. பாகுபலி | – | மிக உயரமான சமணச் சிலை |
| ii. மனிதாபிமானம் | – | மனித கௌரவம் |
| iii. பெண் குதிரைவால் | – | கீற்று மேகம் |
| iv. வாக்குரிமை | – | 18 வயது |
| v. 1972 | – | வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

**30. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது தெளிவுபடுத்துக?**

1. மனித வரலாற்றை புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.
2. வரலாற்று காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல் பதிவுகள் புவியில் பொதிந்து கிடக்கின்றன.
3. மனித மூதாதையர்களின் எலும்புகள் புதைபடிவங்களாக புதைந்துள்ளது.
4. புவி மற்றும் பல்வேறு உயிரினங்களின் வரலாற்று அறிய இச்சான்றுகள் மிக முக்கியமானதாகும்.
5. மனிதர்களின் பரிணாமம், தொல்பழங்காலம் பற்றி பல்வேறு காலகட்டங்களை அறிய புதை படிமங்கள் உதவும்.

**31. செல்வியல் காலத்தில் இந்தியா நிலை குறித்து எழுது?**

1. செவ்வியல் காலத்தில் இந்தியாவில் குஷானர்கள் ஆட்சி நடைபெற்றது
2. அகஸ்டஸ் சீசரின் அவைக்கு குஷாணர் தூதுக்குழு அனுப்பியதாக கூறப்படுகிறது
3. செவ்வியலுக்கு சமமான காலத்தில் சங்க இலக்கியமான பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் தொகுக்கப்பட்டது.
4. வணிகம் : பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் ரோம் ஆகியவற்றோடு வாணிகம் நடைபெற்றது
5. தேக்கு மிளகு மணிகள், தந்தம் ஏற்றுமதி செய்தனர்.

**32. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு மறுமலர்ச்சி, மத சீர்திருத்தம் மற்றும் புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விவரி.**

அச்சு இயந்திரம் அறிவைப் பரந்து விரிவாக்கியது. மத சீர்திருத்தக் கருத்துகளை பிரசுரங்களாகவும், புத்தகங்களாகவும் பரப்பியது.
பயணக் குறிப்புகள், புவியியல் தொடர்பான நூல்கள் கடல்வழிப் பற்றிய அறிவை அதிகரித்தது.
நிலவியல் கண்டுபிடிப்பானது அச்சு இயந்திரத்தைப் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றது.
அறிவைப் பரந்து விரிந்ததாக ஆக்கியதோடு மட்டும் நிற்காமல் அதோடு கூட விமர்சன ரீதியான சிந்தனையையும் முன்னெடுத்துச் சென்றது.

**33. புவி அமைப்பை விவரி?**

1. புவியின் உள்ளமைப்பு மேலோடு கவசம் கருவம் என்ற மூன்று பிரிவுகளாக உள்ளது.
2. மேலோடு : புவியின் மேலடுக்கை புவி மேலோடு என்பர்.
புவியில் உயிரினங்கள் வாழும் மேற்பகுதி மேலோடு.
3. கவசம் : புவி மேலோட்டிற்கு கீழே உள்ள பகுதி கவசமாகும். 2900 கிமீ வரை பரவியுள்ளது.
4. கருவம் : புவியின் மைய அடுக்கு. மிகவும் வெப்பமானது.

**34. கடல் வளங்கள் மனித குலத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை?**

கடல்வளம். மனிதத் தேவையைப் பூர்த்தி செய்யக் கடலில் இருந்து கிடைக்கும் அனைத்து


Scanned with CamScanner

வளங்களும் கடல்வளம் எனப்படுகிறது.
எ.கா. மீன், முத்து, எரிபொருள், கனிமங்கள்.

கடல் வளங்கள் மனிதர்கள்மீது ஏற்படுத்திய தாக்கம்.

மனித ச்சுத்தின் நீடித்த தேவைகளைப் பூர்த்திச் செய்கின்றன.
மனிதர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.
மருத்துவத் துறையிலும் கடல்பொருட்கள் பழு;கு வகிக்கின்றன.
அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும் முக்கியப் பழு;காற்றுகின்றன.
மனித குலத்தின் முக்கியமான தேவையான எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்கிறது.
கனிமம் மற்றும் உலோகப் பொருட்களும் கடலிலிருந்து நாம் பெறுகிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**35. உலக அமைவிடத் தொகுதியின் (GPS) பயன்களை விவரி.**

கைபேசி மற்றும் கைக்கடிகாரம், போன்ற அனைத்திலும் உலக அமைவிடத் தொகுதி பயன்படுகிறது.
இதன் முக்கிய நோக்கம் பயணத் தகவல்களை மிகத் துல்லியமாக தருவதாகும்.
இராணுவ நடவடிக்கைகளுக்கும் இது மிகவும் பயனுள்ளதாய் உள்ளது.
சுற்றுலா செல்பவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது.
வானிலை முன்னறிவிப்பு மற்றும் நிலநடுக்க கண்காணிப்பு போன்றவற்றில் உலக அமைவிடம் கண்டறியும் தொகுதிகள் (GPS) பயன்படுகிறது.

**36. நிரப்புக.**

1. கீழ் பழங் கற்காலம்
2. மாரியஸ், சுல்லா. (கான்சல்கள், செனட்டர்கள்)
3. நுகர்வோர்கள்
4. 2014
5. புது டெல்லி, (சாஸ்திரி பவன்).

**37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?**

1. கல்வியறிவின்மை : உரிமை, கடமைகள் பற்றி அறிய முடிவதில்லை.
2. வறுமை : பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள்.
3. பாலினபாகுபாடு :ஆணாதிக்கம் மிகுந்து காணப்படுகிறது.
4. சாதி வகுப்பு சமய வாதங்கள் : சாதி, சமய மோதலை கட்டுப்படுத்தி இந்திய இறையாண்மை பாதுகாக்கப்படும்.
5. ஊழல் இந்தியாவில் ஊழலை ஒழிக்க லோக் ஆயுக்தா போன்ற நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**38. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?**

Ilahi high school YouTube
www.Padasalai.Net
ம. மரிய அந்துவான்


Scanned with CamScanner

அடிப்படைக் கடமைகள்:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்களின் கடமைகள், பொறுப்புகள் என்ற பொருளில் அமைந்துள்ளது.

பள்ளி வளாகத்தில் அடிப்படைக் கடமைகள் செயல்படுத்தும் விதம்:

பள்ளிக்கு குறித்த நேரத்தில் வருவேன்.

காலை இறைவணக்கக் கூட்டத்தில் கலந்துகொள்வேன்.

தேசிய சின்னங்களான தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை மதித்து செயல்படுவேன்.

இது எனது பள்ளி, இப்பள்ளியால் நான் பெருமை அடைய வேண்டும்; என்னால் இப்பள்ளி பெருமை அடைய வேண்டும்.

பள்ளி ஆசிரியர்கள் வழிகாட்டுதல்படி நடந்து கொள்வேன்.

பள்ளி கடமைகளை நிறைவேற்றுவேன். பள்ளியின் சட்டதிட்டங்களை மதித்து செயல்படுவேன்.

பள்ளி மாணவர்களிடம் சகோதரத்துவத்துடன் பழகுவேன்.

பள்ளியின் சுற்றுப்புறத் தூய்மை பேணி காப்பேன்.

**39. புதுப்பிக்கத்தக்க வளங்கள் புதுப்பிக்க இயலாத வளங்கள் வேறுபடுத்துக.**

| புதுப்பிக்கத்தக்க வளம் | புதுப்பிக்கத்தகாத வளம் |
|---|---|
| புதுப்பிப்பதற்கான ஒரு குறுகிய நேரத்தை எடுத்துக் கொள்கிறது | உருவாக்குவதற்கு பல நூற்றாண்டுகள் தேவைப்படுகிறது |
| மாசுபடுத்தாது | மாசுபடுத்தும் |
| சுற்றுச் சூழல் நலம் காக்கிறது | சுற்றுச்சூழல் சேதப்படுத்தும் |
| எ.கா. சூரியசக்தி, காற்று சக்தி, நீர், மரம், காகிதம் | எ.கா. உலோகங்கள், கண்ணாடி, புதைப்படிவ எரிபொருட்கள் (நிலக்கரி, பெட்ரோல், இயற்கை எரிவாயு, டீசல்) |

**40. நவீன உலகில் பணப்பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரி.**

தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM):

நாம் வங்கிக்குச் சென்று வரிசையில் நின்று படிவம் நிரப்பி பணம் எடுக்கும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM CARD) மூலம் எடுத்துக் கொள்ளலாம், பணம் செலுத்தவும் செய்யலாம்.

கடன் அட்டை (CREDIT CARD):

நாம் முன்னதாகவே பணம் பெற்று பின்னர் செலுத்தும் வகையில் கடன் அட்டை மூலம் இன்று பணப் பரிமாற்றம் நடைபெறுகிறது.

அலைபேசி வலைதள மின்னணு பரிமாற்றம் (NET BANKING):

இன்று நாம் அன்றாட உபயோகிக்கும் ஸ்மார்ட் போன் மூலமாக நினைத்த நேரத்தில் உலகின் எந்த மூலையில் இருப்பவருக்கும் நொடியில் பண பரிமாற்றம் செய்யலாம்.

**41. வேறுபடுத்துக: கருவம் மேலோடு**

| கருவம் | மேலோடு |
|---|---|



Scanned with CamScanner

| புவியின் மைய அடுக்கு | புவியின் மேலடுக்கு |
|---|---|
| நிக்கல், இரும்பு அதிகமாக காணப்படும் | சிலிகா அலுமினியம் அதிகம் காணப்படும் |

**வேறுபடுத்துக: உற்பத்தியாளர் சிதைப்பவர்**

| உற்பத்தியாளர் | சிதைப்பவர் |
|---|---|
| தமக்கு வேண்டிய உணவை தாமே உற்பத்தி செய்து கொள்ளக் கூடியவை | தமக்கு வேண்டிய உணவை தாமே உற்பத்தி செய்து கொள்ள இயலாதவை |
| எ.கா. தாவரங்கள், பாசி | எ.கா. பூஞ்சை, காளான்கள் |

**காரணம் கூறு**

**காடுகள் வளர்ப்பது, உலகம் முழுவதும் ஊக்கப்படுத்தப் படுகிறது. ஏன்?**

புவியின் முக்கிய வளமாகும். மேலும் உயிரினப் பன்மையை பாதுகாக்கவும்.

**42. வரலாறு உலக வரைபடம்**

1. எகிப்திய நாகரிகம் 2. இத்தாலி 3. காஸ்பியன் கடல் 4. வாஸ்கோடகாமா கடல் வழி 5. மெக்கா

**43. சிந்துவெளி நாகரிகத்தின் பொக்கிஷங்களை பற்றி எழுது.**

1. சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்பர்
2. திட்டமிட்ட நகர அமைப்பு கழிவுநீர் கால்வாய்கள், திட்டமிட்ட தெருக்கள் காணப்பட்டது.
3. மொகஞ்சதாரோவில் மாபெரும் குளியல் அறை, அதன் அருகில் பல அறைகள், இருந்தது
4. வீடுகள் சுட்ட மற்றும் சுடாத செங்கற்கள் கொண்டு கட்டினர்
5. ஓவியங்கள் தீட்டப்பட்ட தட்டுகள், ஜாடிகள், கிண்ணங்கள். மண்பானைகளைச் செய்தனர்.

**அல்லது**

**12. தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னத காலம் விளக்கவும்?**

1. அரசின் நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டது
2. உள்ளாட்சி நிர்வாகம் கிராமம் நாடு, கோட்டம் என வகைப்படுத்தப்பட்டது
3. உள்ளாட்சி மன்றங்கள் மக்களின் உள்ளூர் தேவைகளை நிறைவேற்றியது.
4. வணிகமும் பொருளாதாரமும் விரிவடைந்தது
5. சோழர்கால செப்புச் சிலைகளுள் நடராஜர் சிலை புகழ்பெற்றதாகும்.

**44. புவியியல் உலக வரைபடம்**

1. பசிபிக் நெருப்பு வளையம் 2. தூந்திர புல்வெளி 3. இமயமலை 4. உலக நிலநடுக்க மண்டலம் 5. கோபி குளிர் பாலைவனம் 6. பிரான்ஸ் 7. மக்கள் தொகை குறைவான பகுதி 8. வெப்ப நீரோட்டம் (ஏதேனும் ஒன்று)

ilahi high school YouTube

www.Padasalai.Net



Scanned with CamScanner


www.Padasalai.Net www.TrbTnpsc.com

## 42. வரலாறு உலக வரைபடம்

ம.மரிய அந்துவான்
அரசு உயர்நிலைப் பள்ளி
காட்டுக்கூடலூர்
9443282980




## 44. புவியியல் உலக வரைபடம்




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# A அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

**நேரம் : 3.00 மணி** **சமூகஅறிவியல்** **மதிப்பெண்கள் : 100**

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடு:-** 14×1=14

1) சிந்துசமவெளி மக்கள் 'இழந்த மெழுகு செயல்முறை' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை ______ ஆகும்
அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன் இ) பறவை ஈ) நடனமாடும் பெண்

2) மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் ______
அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்

3) கூற்று: பௌத்த மதம் இந்தியாவில் இருந்து சீனாவிற்குச் சென்றது
காரணம்: சீனாவில் தொடக்க காலத்தில் குடியேறிய இந்தியர்கள் பௌத்த மதத்தை பின்பற்றியவர்கள்
அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) கூற்றும் காரணமும் தவறு
இ) கூற்றும் காரணமும் சரியானவை ஈ) கூற்று தவறு; காரணம் கூற்றுக்கு தொடர்பற்றது

4) அமெரிக்க கண்டம் ______ என்பவரின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.
அ) அமெரிக்கோ வெஸ்புகி ஆ) கொலம்பஸ்
இ) வாஸ்கோடகாமா ஈ) ஹெர்நாண்டோ கார்டஸ்

5) புவியினுள் உருகிய இரும்பைக் கொண்ட அடுக்கை ______ என்று அழைக்கின்றோம்
அ) கருவம் ஆ) வெளிக்கரு இ) கவசம் ஈ) மேலோடு

6) பருவக்காற்று என்பது ______
அ) நிலவும் காற்று ஆ) காலமுறைக் காற்றுகள்
இ) தலக்காற்று ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

7) உயிர்க்கோளத்தின் மிகச்சிறிய அலகு ______
அ) சூழ்நிலை மண்டலம் ஆ) பல்லுயிர்த் தொகுதி
இ) சுற்றுச்சூழல் ஈ) இவற்றில் எதுவும் இல்லை

8) ஒரு நிலவரைபடத்தின் கருத்து (அல்லது) நோக்கத்தைக் குறிப்பிடுவது
அ) தலைப்பு ஆ) அளவை இ) திசைகள் ஈ) நிலவரைபடக்குறிப்பு

9) ______ காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.
அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

10) பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் ______ ஆண்டு நடைபெற்றது
அ) 1920 ஆ) 1821 இ) 1921 ஈ) 1948

11) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு ______
அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்

12) பொருந்தாத ஒன்றைக் கண்டறிக
அ) வங்கியியல் ஆ) ரயில்வே இ) காப்பீடு ஈ) சிறுதொழில்

13) இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் ______ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
அ) 1920 ஆ) 1934 இ) 1918 ஈ) 1940

14) பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு
அ) 27% ஆ) 57% இ) 28% ஈ) 49%

பகுதி - II

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**குறிப்பு: வினா எண். 28க்கு கட்டாயமாக விடையளி.** **10×2=20**

15) சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.

16) சீனப்பெருஞ்சுவர் - குறிப்பு வரைக.

17) பிரெஞ்சு புரட்சியின் போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?

18) ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி?

19) குறுட்டு ஆறு என்றால் என்ன?

20) கடலடி நிலத்தோற்றங்கள் யாவை?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



21) கொள்ளை நோய் என்றால் என்ன?
22) தொலை நுண்ணுர்வு - வரையறு.
23) ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறு.
24) போக்சோ (POCSO) - வரையறு
25) இந்தியாவிலுள்ள தேர்தல் முறைப் பற்றி விவரி?
26) சூரிய சக்தி என்றால் என்ன?
27) அந்நியச் செலாவணி என்றால் என்ன?
28) நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம் என்றால் என்ன?

## பகுதி - III

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **10×5=50**

குறிப்பு: வினா எண். 42க்கு கட்டாயமாக விடையளி.

29) பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) பாகுபலி | - | மனித கௌரவம் |
| ஆ) மனிதாபிமானம் | - | வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் |
| இ) பெண்குதிரைவால் | - | 18 வயது |
| ஈ) வாக்குரிமை | - | மிக உயரமான சமணச்சிலை |
| உ) 1972 | - | கீற்றுமேகம் |

30) மனிதர்களின் வரலாறு புவியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையது - தெளிவுபடுத்துக
31) செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுது.
32) அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு மறுமலர்ச்சி மத சீர்திருத்தம் மற்றும் புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விவரி?
33) புவி அமைப்பை விவரி?
34) கடல் வளங்கள் மனிதகுலத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை?
35) உலக அமைவிடத் தொகுதியின் (GPS) பயன்களை விவரி?
36) கோடிட்ட இடத்தை நிரப்புக.
1) கை கோடாரிகளும், வெட்டுக் கருவிகளும் ______ பண்பாட்டைச் சேர்ந்த முக்கிய கருவி வகைகளாகும்.
2) ______ மற்றும் ______ ரோம நீதிபதிகள் ஆவார்கள்.
3) பிறச்சார்பு ஊட்ட உயிர்கள் (Hetrotrophs) என அழைக்கப்படுபவை ______
4) ______ ஆண்டு நோட்டா அறிமுகப்படுத்தப்பட்டது
5) மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையகம் ______
37) மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38) அடிப்படை கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?
39) புதுப்பிக்கத் தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கதகாத வளங்கள் - வேறுபடுத்துக.
40) நவீன உலகில் பணப்பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரி?
41) வேறுபடுத்துக.
அ) கருவம் மற்றும் மேலோடு
ஆ) உற்பத்தியாளர் - சிதைப்பவர்
இ) காடுகளை மீட்டெடுத்தல் உலகம் முழுவதும் ஊக்கப்படுத்தப்படுகிறது. (காரணம் கூறு)
42) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
1. எகிப்திய நாகரீகம் 2. இத்தாலி 3.காஸ்பியன் கடல்
4. வாஸ்கோடகாமா கடல்வழிப் பாதை 5. மெக்கா

## பகுதி - IV

ஏதேனும் இரு வினாவிற்கு விடையளி:- **2×8=16**

43) அ) சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுது. **(அல்லது)**
ஆ) "தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னத காலம்'' விளக்கவும்.
44) உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
1. பசிபிக் நெருப்பு வளையம் 2. தூந்திர புல்வெளி 3. இமயமலை
4. உலக நிலநடுக்க மண்டலம் 5. கோபி குளிர் பாலைவனம் 6. பிரான்ஸ்
7. மக்கள்தொகை குறைந்து காணப்படும் பகுதி 8. வெப்ப நீரோட்டம் ஏதேனும் ஒன்று

****/****

ilani high school YouTube

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

Scanned with CamScanner